பக்கங்கள்: 09
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 03 திங்கட்கிழமை 19.07.2021 கதிர் 122

## மேலும் 245 பேர் சிக்கினார்கள்!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய மேலும் 245 பேர் கடந்த 24 மணி நேரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இன்று காலை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் 2

## இன்றும் நாளையும் கட்டாயம் கொழும்பிலேயே இருங்கள்!

### ஆளுங்கட்சியினருக்கு ஜனாதிபதி வேண்டுகோள்

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமையை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சியினரால் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் இன்று ஆரம்பமாகியுள்ளது.

இன்று முற்பகல் 10 மணிக்கு 2

## யாழ்., முல்லையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 5 பேர் 3 மாதங்களின் பின் விடுவிப்பு

**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட 5 பேர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் இன்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் ஐவரிடம் விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் எவையும் இல்லாததால் வழக்கைத் தொடர முடியவில்லை என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தையடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்கும் முனைப்பில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த ஏப்ரல் 17ஆம் திகதி ஐவர் கைது செய்யப்பட்டனர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அவர்களது வீடுகளில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இவர்களுள் 2

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடுவதற்கு கோட்டா தயார்

## அவரே பகிரங்கமாக அறிவிப்பு



**பலரின் வேண்டுகோளின் பிரகாரம் இலங்கையின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் நான் போட்டியிடுவதற்கு உத்தேசித்துள்ளேன்.**

**- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

**ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் இன்று நடத்திய சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

**எனது திட்டங்களைச் செயற்படுத்த மூன்று வருடங்கள் மாத்திரமன்றி மேலும் 5 வருடங்களும் இருக்கின்றன என்றும் அவர் இதன் போது குறிப்பிட்டார்.** 2

## யாழ். பொலிஸ் நிலையங்களுக்கு ஓட்டோக்கள்






**(இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு ஓட்டோ வழங்கும் நிகழ்வு யாழ். பிரதம பொலிஸ் நிலையத்தில் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் கலந்துகொண்டு பொலிஸ் நிலையங்களுக்கான ஓட்டோக்களை வழங்கி வைத்தார்.

நாட்டில் சட்டம் - ஒழுங்கை நடைமுறைப்படுத்தி குற்றங்களைக் கட்டுப்படுத்தும் முகமாக 2

## தரம் 5 புலமைப்பரிசில்: நவம்பர் 14 உயர்தரம்: நவ.15 - டிசெ.10 வரை



2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதியும் மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நவம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 10ஆம் திகதி வரையும் நடைபெறும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபர் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அதேவேளை, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஒக்டோபர் 4ஆம் திகதி 2

## கொரோனாவைக் கட்டுப்படுத்த பூரண ஒத்துழைப்பு வழங்குங்கள்

### வடக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மக்களிடம் வேண்டுகோள்



**(இ.கலையமுதன்)**

வடக்கு மாகாணத்தில் கொரோனாவைக் கட்டுப்படுத்த சுகாதாரப் பிரிவினருக்குப் பூரண ஒத்துழைப்பை பொதுமக்கள் வழங்க வேண்டும்.

- இவ்வாறு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிகக்கார தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் அரசால் வழங்கப்பட்ட ஓட்டோக்களைப் பொலிஸ் நிலையங்களுக்கு 2

## யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு பதவியேற்பு



**(இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்கு இடமாற்றமாகிச் சென்றுள்ள நிலையில், கொழும்பு 2

## யாழ். பொலில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பிரதமர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புஅமைச்சரின்வழிகாட்டுதலின் கீழ் நாடு பூராகவும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கென 2 ஆயிரம் ஓட்டோக்கள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சால் பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குக் கையளிக்கப்பட்ட 40 ஓட்டோக்களும்பொலிஸ்நிலையங்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று யாழ். பிரதம நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிகக்கார, யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே ஆகியோர் கலந்துகொண்டு யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளிடம் ஓட்டோக்களைக் கையளித்தனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் தலா இரண்டு ஓட்டோக்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## கொரோனாவைக்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கி வைக்கும் இன்றைய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலிஸ் நிலையங்களுக்கு இன்று ஓட்டோக்கள் வழங்கப்பட்டமைக்கு இந்த நாட்டின் அரசுக்கும் எமக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொலிஸ் நிலையங்களில் இந்த வாகனப் பிரச்சினையானது நீண்டகாலமாகக் காணப்பட்டது. அந்த வாகனப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சால் குறித்த வேலைத்திட்டமானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ள கொரோனா நிலைமை மற்றும் ஏனைய பொதுமக்கள் சேவை வழங்க பொலிஸ் நிலையங்களில் வாகனத் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாகக் காணப்பட்டது. அந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு இன்று கிட்டியுள்ளது. ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் தலா 2 ஓட்டோக்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும் புதிதாக திறக்கப்படவுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் இந்த ஓட்டோக்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோல் எதிர்வரும் காலங்களில் பொலிஸாருக்கு மோட்டார் சைக்கிள் மற்றும் தேவையான வாகனங்கள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் பொலிஸ் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது நாடு பூராகவும் கொரோனா நிலைமை சற்று அதிகமாகக் காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் கடந்த சில நாள்களில் சில பகுதிகள் முடக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

நான் ஏற்கனவே தென் மாகாணத்தில்தான் கடமையாற்றியிருந்தேன். வடக்கு மாகாணத்தில் நான் கடமை ஏற்றபின் பருத்தித்துறை மற்றும் ஏனைய சில பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலின்படி சில வேலைத்திட்டங்கள் பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்குப் பூரண ஒத்துழைப்பை இந்தக் காலப்பகுதிகளில் வழங்க வேண்டும் - என்றார்.

## மேலும் 245 பேர்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 50 ஆயிரத்து 994 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தனிமைப்படுத்தலை மீறுவோரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் மற்றும் உட்பிரவேசிக்கும் பகுதிகளில் 3 ஆயிரத்து 401 பேரும் அவர்கள் பயணித்த 2 ஆயிரத்து 584 வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அனுமதியின்றி மாகாணத்தை விட்டு வெளியேற மற்றும் உட்பிரவேசிக்க முற்பட்ட 293 பேர் அவர்கள் பயணித்த 139 வாகனங்களிலேயே திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு தொடர்ந்தும் அமுலில் உள்ளதால் அது தொடர்பில் கருத்தில்கொண்டு செயற்படுமாறு பொலிஸ் பேச்சாளர், பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## யாழ்., முல்லையில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவரும் அடங்குகின்றார்.

இதேவேளை, இளவாலை பொலிஸ் பிரிவில் இருவரும், கோப்பாய் மற்றும் பலாலி பொலிஸ் பிரிவுகளில் தலா ஒருவரும் என நால்வர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த ஏப்ரல் மாத முற்பகுதியில் இந்தியாவில் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டவர்களுடன் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே நால்வரும் கைதுசெய்யப்பட்டனர் என்று அப்போது தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், மூன்று மாதங்களின் பின்னர் சந்தேகநபர்கள் ஐவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தப்பட்டனர்.

ஐவருக்கும் எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவின் கீழ் ‘பி’ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர்கள் ஐவரிடம் விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் எவையும் இல்லாததால் வழக்கைத் தொடர முடியவில்லை என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

அதனால் சந்தேகநபர்கள் ஐவரையும் வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

## அடுத்த ஜனாதிபதி........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு மக்களுக்கு நான் வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் எனது பதவிக் காலங்களில் நிறைவேற்றியே தீருவேன் என்றும் அவர் உறுதியளித்தார்.

மக்களை ஏமாற்றுபவன் நான் அல்லன். அவர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றுவதே எனது இலக்கு. அவர்கள் எப்போதும் எனது பக்கமே நிற்கின்றார்கள் என்றும் ஜனாதிபதி அடித்துக் கூறினார்.

இலங்கையில் 2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் தற்போதைய நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ போட்டியிடுவார் என ‘மொட்டு’ கட்சி உறுப்பினர்கள் தெரிவித்து வந்தநிலையிலேயே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த அறிவிப்பும் வெளியாகியுள்ளது. இலங்கையின் அரசமைப்பின் பிரகாரம் ஒருவர் இரண்டு தடவைகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை வகிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## தரம் 5 புலமைப்பரிசில்;..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை ஆரம்பமாகி 31ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் இல்லாததால் பாடத்திட்டங்கள் முறையாக முடிக்கப்படவில்லை என்ற நிலையில் பரீட்சைகளின் திகதிகள் மறு ஆய்வு செய்யப்பட்டு பிற்போடப்பட்டுள்ளன.

## யாழ்ப்பாணம்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவக் கட்டளைத் தலைமையகத்தில் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு இன்று காலை சுப வேளையில் யாழ். மாவட்ட இராணு வக் கட்டளைத் தளபதியாக பலாலி இராணுவக் கட்டளை தலைமையகத்தில் தனது கடமைகளைப்பொறுப்பேற்றுக்கொண்டார்.

## இன்றும் நாளையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்றம் கூடியது. அதனைத் தொடர்ந்து குறித்த பிரேரணை மீதான விவாதம் ஆரம்பமானது. இதன்படி இன்றும், நாளையும் இரண்டு நாள்களுக்கு விவாதம் நடத்தப்பட்டு நாளை மாலை அது தொடர்பான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இந்நிலையில், நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆளுங்கட்சிக் குழுக் கூட்டம் நடைபெற்றுள்ளது. அந்தக் கூட்டத்தில் இந்தப் பிரேரணை தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு ஆளுங்கட்சியில் உள்ள அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று ஆளுங்கட்சியின் அனைத்து எம்.பிக்களுக்கும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன் பிரேரணை மீதான விவாதம் நடைபெறும் இன்றும், நாளையும் கொழும்பிலேயே தங்கியிருக்குமாறு ஆளுங்கட்சி உறுப்பினர்களை ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தடுப்பூசிக் குழப்பங்கள்

**‘குதிரையோடிய பின்னர் லாயத்தை மூடிய கதை’ என்பார்கள். அது போன்றுதான் இருக்கின்றது கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு எதிரான தடுப்பூசி செலுத்தலும்.**

**இப்போது மில்லியன் கணக்கில் தடுப்பூசி வந்திறங்குவதாக அடிக்கடி செய்திகளை வெளியிட்டுப் பீற்றிக் கொள்கின்றது அரசு.**

**ஒரு நாளில் அதிக தடுப்பூசிகளை ஏற்றும் வீதத்தில் இலங்கைதான் முன்னணியில் இருக்கின்றது என்றும் அரசு வட்டாரங்கள் பீற்றிக் கொள்கின்றன.**

**ஆனால், நிலைமையோ "Operation success, but patient died (சத்திர சிகிச்சை வெற்றி; ஆனால் நோயாளி இறந்து விட்டார்) என்ற கதை மாதிரித்தான் உள்ளது.**

**சாதாரண கொரோனா வைரஸ் பரவத் தொடங்கி ஒன்றரை ஆண்டுகளாகி விட்டன. மேற்கு நாடுகள் பலவும் தத்தமது நாட்டில் கணிசமான எண்ணிக்கை மக்களுக்கு தொற்றுத் தடுப்பூசியைத் திருப்தியான அளவுக்குச் செலுத்தி, இதுவரை முடக்கப்பட்டு அல்லது மூடப்பட்டு இருந்த தத்தமது நாடுகளில் இறுக்கத்தைத் தளர்த்தி, திறந்து விட்டு மாதங்கள் கடந்து விட்டன.**

**ஆனால் நாம் இப்போதுதான் தடுப்பூசியை உச்ச அளவில் செலுத்துவது குறித்துப் பீற்றிக் கொண்டிருக்கின்றோம்.**

**இந்த விடயத்தில் அரசிடம் முறையான திட்டமிடல் இருக்கவில்லை. சர்வதேச நாடுகளுடன் புதிய அரசின் தொடர்பாடல் – ஊடாட்டம் – உரிய தரத்தில் இருக்கவில்லை. சர்வதேச உறவுகள் விவகாரத்தில் அரசு பெரும் சொதப்பல் சொதப்பியிருந்தது.**

**இவற்றினால் உரிய தடுப்பூசிகளை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பெற்றாலும் முதல் தடுப்பூசி செலுத்திய பல லட்சம் பேருக்கு இரண்டாவது தடுப்பூசியை ஏற்ற முடியவில்லை.**

**சாதாரண கொவிட் வைரஸ்க்கான தடுப்பூசிகளைக் கணிசமாக எமது நாடு ஏற்றி முடிக்க முன்னரே கொவிட் வைரஸின் அடுத்த கட்டம் – புதிய திரிவடைந்த வைரஸின் தாக்கம் – சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.**

**தற்போது இலங்கை மக்களுக்குச் செலுத்தப்பட்டுள்ள தடுப்பூசி ரகங்கள் பெரும்பாலும் வீரியமும், பரவல் வீச்சமும் கொண்ட திரிவடைந்த வைரஸ் ரகங்களுக்கு ஈடுகொடுத்து, அவற்றைக் கட்டுப்படுத்தக் கூடியவை அல்ல என்கின்றனர் வைத்திய நிபுணர்கள்.**

**இதுவரை சாதாரண கொரோனா வைரஸ் இலங்கையில் முதன்மை நிலையில் பரவி வந்தது. இப்போது செலுத்தப்படும் தடுப்பூசி ரகங்கள் மூலம் அதனைக் கட்டுப்படுத்தி, சமாளிக்கலாம் என்ற நம்பிக்கை இருந்தது.**

**தற்போது மக்கள் பெற்று வரும் தடுப்பூசி, மேற்படி சாதாரண கொரோனாவுக்கு முகம்கொடுத்து, அதற்கான காப்பரணை இலங்கை மக்களுக்கு வழங்கக் கூடியதானதாக இருந்தது.**

**ஆனால், திரிவடைந்த ‘டெல்டா’ வைரஸ் ரகம் இப்போது தீவிரமாகப் பரவத் தொடங்கியிருக்கின்றது.**

**இந்த ‘டெல்டா’ வகை வைரஸ் நாட்டில் முதன்மை கொரோனா வைரஸ் தொற்றாக உருவெடுத்து வருகிறது. இதனால் நாடு முன்னர் எதிர்கொண்டமையை விடவும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படும் பேராபத்து உள்ளது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண எச்சரிக்கை வெளியிட்டுச் சுட்டிக் காட்டியுள்ளார்.**

**இந்தியாவிலிருந்து உலக நாடுகளுக்குப் பரவியுள்ள, கொடிய வைரஸ் திரிவான ‘டெல்டா’ தொற்று இலங்கையில் தீவிரமடையும் பேராபத்து உள்ளது என்பதை மருந்து உற்பத்தி வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவும் உறுதிபடத் தெரிவித்திருக்கின்றார்.**

**இப்படி எச்சரிக்கைகள், அபாயச் சங்கு ஊதல்களுக்கு மத்தியில்தான் இந்தத் தடுப்பூசி வழங்கல் தொடர்பாக அரசுத் தலைமைக்கு ஆலோசனை வழங்கும் குழுவில் இருந்து மூன்று நிபுணர்கள் அடுத்தடுத்துப் பதவி விலகியிருக்கின்றனர்.**

**சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியே இதுவரை பெரும்பாலும் இலங்கையருக்குச் செலுத்தப்பட்டு வந்தது. இந்த நிலையில் மற்றொரு ஊசியான சினோவக் தடுப்பூசி பயன்படுத்துவதற்கு இலங்கையின் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை அனுமதி வழங்கியமையை அடுத்து இந்த ராஜினாமாக்கல் இடம்பெற்றுள்ளன.**

**தடுப்பூசிகளைத் தாண்டி வீரியமுள்ள, பரவல் வீச்சுக் கூடிய, திரிவடைந்த வைரஸ்க்களின் பேராபத்து சூழ்ந்து வரும் நிலையில், தற்போதைய தடுப்பூசிகள் போதிய காப்பரன் தரா என்ற அச்சத்தையே இந்தச் சூழல்கள் ஏற்படுத்தியுள்ளன.**

# மலையகச் சிறுமிக்கு நீதி கிடைக்கவேண்டும்

## ட்றொடெக்ட் அமைப்பின் தலைவி மைதிலி வலியுறுத்து




மலையகச் சிறுமியின் மரணத்துக்கு நியாயம் கிடைக்கும் வரை தொடர்ந்து குரல் கொடுப்போமென வீட்டுப் பணிப்பெண்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்பான ட்றொடெக்ட் அமைப்பின் தலைவி கருப்பையா மைதிலி தெரிவித்துள்ளார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

சிறுமியின் மரணம் தொடர்பான உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ஆகவே, சிறுமியின் மரணத்துக்கு நீதி கிடைக்கும் வரை எமது சங்கம் தொடர்ந்து போராடும். இந்த விடயத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

குறித்த சிறுமி, தரகர் ஒருவர் ஊடாகவே வீட்டு வேலைக்குச் சென்றுள்ளார். சிறாரை எவ்வாறு வேலைக்கு அமர்த்த முடியும்.

அத்துடன் சிறுமியின் மரணம் தொடர்பில் எமக்கு உண்மை தெரிய வரவேண்டும். உண்மையை மூடிமறைக்க எவரும் முயற்சிக்கக் கூடாது. – என அவர் வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ரிஷாத் பதியுதினின் இல்லத்துக்கு கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்ரோபரில் டயகம 3ஆம் பிரிவில் இருந்து 15 வயதுச் சிறுமி வீட்டுப் பணிப்பெண்ணாக சென்றுள்ளார்.

கடந்த 3ஆம் திகதி தீக்காயங்களுடன் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 15ஆம் திகதி சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

குறித்த சிறுமியின் மரணம் தொடர்பாக அவரது குடும்ப உறுப்பினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு தொடர்பில் மக்கள் அவதானம்!

இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் நாடு முழுவதும் மொத்தம் 15 ஆயிரத்து 161 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இவற்றில் அதிகளவானோர் மேல் மாகாணத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் மொத்தம் 4 ஆயிரத்து 509 பேர் உறுதிப்படுத்தப்பட்ட டெங்கு நோயாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 1,905 உறுதிப்படுத்தப்பட்ட டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிக ஆபத்துள்ள சுகாதாரப் பிரிவுகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், இதற்காக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் சிறப்புக் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன எனவும் தேசிய டெங்கு தடுப்புப் பிரிவு கூறியுள்ளது.

மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்கள் உட்பட பல மாவட்டங்கள் டெங்கு நோய்க்கான அதிக ஆபத்து நிறைந்த பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, குருணாகல், கண்டி, சப்ரகமுவ, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களும் டெங்கு நோய் பரவலுக்கான அதிக ஆபத்து நிறைந்த பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதேவேளை நாடு முழுவதும் டெங்கு ஒழிப்புத் திட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன எனவும் தேசிய டெங்கு தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ஜிகா வைரஸ் பரவுவதற்கு இலங்கையின் சூழல் உகந்ததாக இருப்பதால், நுளம்புகள் குறித்து கூடுதல் பாதுகாப்பு எச்சரிக்கையுடன் இருக்குமாறு சுகாதார அமைச்சகம் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

# சுற்றுலாப் பயணிகளை கவருவதற்கு புதிய திட்டம்



கலாசாரத்தை பாதுகாத்து சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய வகையில் கண்டி, போகம்பறைச் சிறைச்சாலை வளாகம் புனரமைக்கப்படவுள்ளதாக வெகுஜன ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டி, போகம்பறை சிறைச்சாலை புனரமைப்பு தொடர்பாக மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்குப் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் இது தொடர்பாக தெரிவித்துள்ளார்.

மிக பழைமை வாய்ந்த போகம்பறை சிறைச்சாலையின் புனரமைப்பு பணிகள் குறுகிய காலத்திற்குள் பூர்த்தி செய்யப்படும் என்று தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகள் நீண்ட காலம் கண்டியில் தங்கி இருக்கக் கூடிய வகையில் சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடல் இடம் பெற்றதாக குறிப்பிட்ட அமைச்சர் கண்டிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் ஓரிரு தினங்கள் மட்டுமே கண்டி விடுதிகளில் தங்கி வெளியேறுகின்றனர்.

இந்த நிலையை மாற்றி கண்டி கிராமங்களில் உள்ள சுற்றுலா இடங்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் இடையில் நீண்ட கால தொடர்புகள் இருக்கக்கூடிய பரிவர்த்தனை இடமாக போகம்பறை சிறைச்சாலை புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

# மன்னார் மாவட்டத்திலிருந்து முதல் பெண் விமானி தெரிவு



மன்னார் மாவட்டத்தின் முதலாவது பெண் விமானியாகுவதற்கான முதல் கட்டப் பயிற்சிகளை இமானுவேல் எவாஞ்சலின் நிறைவு செய்துள்ளார்.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவில் வட்டக்கண்டல் காத்தான்குளம் கிராமத்தில் பிரான்சிஸ் இமானுவேல் தாசிலம்மா தம்பதியினருக்கு 1999 மகளாக பிறந்த இவர் பாடசாலைக் கல்வியை மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் உயர்தரம் வரை நிறைவு செய்துள்ளார்.

சிறுவயது முதல் விமானியாக வரவேண்டும் என்ற இலக்கை அடைவதற்காக கடந்த 2020ஆம் திகதி ஜனவரி மாதம் கொழும்பில் உள்ள ஆசிய விமான நிலையத்தில் இணைந்து முதல்கட்ட பயிற்சியை நிறைவு செய்துள்ளார்.

இன்னும் இரண்டு வருடங்களில் அனைத்துப் பயிற்சிகளையும் நிறைவுசெய்து விமானியாகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# இந்தோனேஷியாவில் இரு வாரத்தில் கொரோனாவுக்கு 114 டாக்டர்கள் சாவு!

இந்தோனேஷியாநாட்டில்கொரோனாப் பரவல் மிகவும் அதிகரித்துள்ளது. அங்கு டெல்டா வகை வைரஸ் தாக்கியதை தொடர்ந்து அது பல்வேறு இடங்களுக்கும் பரவி வருகிறது. இதன் மூலம் ஆசியா வில் கொரோனாவின் மையப்பகுதியாக இந்தோனேஷியா மாறி இருக்கிறது. இந்தோனேஷியாவில் கிராமப்பகுதிகளே அதிகமாக உள்ளன. அங்கு போதுமான ஆஸ்பத்திரி மற்றும் மருத்துவ வசதிகள் இல்லை. இதனால் நோயில் சிக்கியவர்கள் சிகிச்சை கிடைக்காமலேயே செத்து மடி யும் அவலம் ஏற்பட்டுள்ளது.

நேற்று மட்டும் 44 ஆயிரத்து 721 பேரை கொரோனா தாக்கி உள்ளது. 1,093 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

ஆஸ்பத்திரிகளில் கொரோனாவுக்கு சிகிச்சை அளிக்க போதுமான டாக்டர்கள், தாதிகள் இல்லை. அதே நேரத்தில் அவர்களும் கொரோனாவில் சிக்கி பலியாகிறார்கள். கடந்த 2 வாரத்தில் மட்டுமே 114 டாக்டர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தோனேஷியாவில் இதுவரை 545 டாக்டர்கள் கொரோனாவுக்கு உயிரிழந்துள்ளனர். அவர்களில் 20 சதவீதம் பேர் கடந்த 2 வாரத்தில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் மாடர்னா தடுப்பூசி போடப்படுகிறது. இதன் பூஸ்டர் ஊசியாக சீனாவில் சினோவேக் ஊசியை போடுகிறார்கள். 95 சதவீத சுகாதார ஊழியர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. ஆனால் அவர்களிலும் சிலர் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டு இருக்கிறது.

# தனிமைப்படுத்தலில் இங்கிலாந்து பிரதமர்



இங்கிலாந்து சுகாதாரத் துறை மந்திரி சஜித் ஜாவித் சையதுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. லேசான அறிகுறிகளுடன் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சஜித் ஜாவித் கொரோனாத் தடுப்பூசிகளின் இரு டோஸ்களையும் போட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கிடையே, கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் போரிஸ் ஜான்சன் இல்லத்திற்கு ஜாவித் சென்றார் எனக் கூறப்படுகிறது. எனினும், பிரதமர் போரிஸ் ஜான்சனை நேரடியாக ஜாவித் சந்தித்தாரா என்பது பற்றி அவரது செய்தித் தொடர்பாளர் எந்த தகவலையும் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில், பிரதமர் போரிஸ் ஜான்சன் வெளியிட்டுள்ள அறிவிப்பில், வரும் 26 ஆம் திகதி வரை தன்னை தனிமைப்படுத்திக் கொள்ளப் போகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.



# கொரோனாக் கட்டுப்பாடுகளை தளர்த்தியது இங்கிலாந்து அரசு

இங்கிலாந்தில் கடந்த சில நாள்களாக கொரோனாப் பரவல் மீண்டும் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் இன்று முதல் ஊரடங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. தடுப்பூசிகள் வந்த பிறகு கொரோனாப் பாதிப்பின் தீவிரம் குறைந்துள்ளதாக இங்கிலாந்து அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இரவு நேர கிளப்கள், உள் அரங்கு கூட்டங்கள் ஆகியவை எவ்விதக் கட்டுப்பாடுகளும் இன்றி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மாஸ்க் அணிதல் மற்றும் வீட்டில் இருந்தபடியே பணியாற்றுவதற்கான சட்டரீதியான கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள பிரதமர் போரிஸ் ஜான்சன், தடுப்பூசி போட்டுக் கொள்வதிலும் சுணக்கம் காட்டக்கூடாது என்றார்.

# கொரோனாவால் உயிரிழந்தவர்கள் உலகளவில் 41 லட்சத்தைக் கடந்தது

சீனாவின் வுகான் நகரில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது.

இந்நிலையில், உலக அளவில் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 19.11 கோடியைக் கடந்துள்ளது.

கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து 17.41 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

மேலும், வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 41 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

வைரஸ் பரவியவர்களில் 1.29 கோடிக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். 80 ஆயிரத்து 500இற்கும் அதிகமானோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.




கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேஸில், ரஷ்யா, பிரான்ஸ் ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.



# ஹஜ் புனிதப் பயணம் 60 ஆயிரம் பேர் மட்டும்

கொரோனாப் பரவலுக்கு நடுவே குறைந்த அளவிலான யாத்ரீகர்களுடன் புனித ஹஜ் கடமை தொடங்கியுள்ளது.

கொரோனாப் பரவலுக்கு நடுவே குறைந்த அளவிலான யாத்ரிகர்களுடன் புனித ஹஜ் கடமை தொடங்கியுள்ளது.

இஸ்லாமியர்களின் புனித நகரமான மெக்காவில் உள்ள ஹஜ்ஜுக்குச் செல்ல நடப்பாண்டு 5 லட்சத்து 58 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 60 ஆயிரம் பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள்.

மற்ற நாடுகளைச் சேர்ந்த யாத்ரிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் சவுதியில் குடியிருப்பவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 6 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களும் சிறு சிறு குழுக்களாகவும், சமூக இடைவெளியுடன் காபாவை சுற்றி வரவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



# ரஷ்யாவில் காட்டுத் தீ

ரஷ்யாவின் வனப்பகுதியில் 8 லட்சம் ஹெக்டேயர் பரப்பளவில் பற்றி எரியும் காட்டுத் தீயை அணைக்க அந்நாட்டு தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர்.

சைபீரிய வனப்பகுதியில் கடந்த சில வாரங்களாக காட்டுத் தீ பற்றி எரிந்து வருகிறது. நேற்று ஒரே நாளில் 4 ஆயிரத்து 500 ஹெக்டேயர் பரப்பளவில் 22 புதிய இடங்களில் நெருப்பு பற்றி எரிகிறது. இதனால் ஏற்பட்டுள்ள புகை மண்டலம் அப்பகுதி முழுவதும் சூழ்ந்துள்ளது.

வனப்பகுதியை ஒட்டியுள்ள கோர்னி என்ற பகுதியை புகை சூழ்ந்துள்ளதால் அங்கு வாழும் மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். தொடர்ந்து எரியும் நெருப்பை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்களுடன், இராணுவத்தினரும் களமிறக்கப்பட்டுள்ளனர். நெருப்பு தொடர்ந்து எரிவதால் மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# தமிழக சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டும்



## கமல்ஹாசன் வலியுறுத்தல்

தமிழக சட்டப்பேரவை நிகழ்வுகளை முழுமையாக நேரடி ஒளிபரப்பு செய்ய தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என, மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெளிப்படையான அரசு நிர்வாகம், பங்கேற்பு ஜனநாயகம் ஆகியவை மக்கள் நீதி மய்யம் தொடங்கிய நாளில் இருந்தே நாங்கள் வலியுறுத்திவரும் அம்சங்கள். சட்டப்பேரவையின் நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்வது மக்கள் பிரதிநிதிகள் பொதுப் பிரச்சினைகள் மீது நிகழ்த்தும் விவாதங்களைச் சாமானியனும் அறிந்து கொள்ள உதவக்கூடியது.

சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்ப வேண்டுமென கோரி, 2012 இல் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட பொதுநல வழக்கை அ.தி.மு.க. அரசு சாக்குப்போக்கு சொல்லி நிலுவையில் போட்டுவிட்டது.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்வோம் என, தன் தேர்தல் வாக்குறுதியில் (வாக்குறுதி எண்: 375) தி.மு.க. அறிவித்திருந்தது. ஆனாலும், முதல் சட்டப்பேரவைக் கூட்டத் தொடரின் ஆளுநர் உரையின் முழு நிகழ்வையும் நேரடி ஒளிபரப்பு செய்யவில்லை.

இந்திய நாடாளுமன்றத்தின் நிகழ்ச்சிகள் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் நேரடியாக ஒளிபரப்பாகின்றன. கேரள சட்டப்பேரவை நிகழ்வுகள் இணைய வழியில் வெப் ஸ்ட்ரீம் செய்யப்படுகிறது. இதற்கென்றே தனியாக ஒரு யூடியூப் சனலும் உள்ளது.

நடைபெற இருக்கும் பட்ஜெட் கூட்டத் தொடரில் துறைவாரியான மானியக் கோரிக்கை விவாதங்கள் முழுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்ய தமிழக அரசு ஆவன செய்யவேண்டும். தங்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் சட்டப்பேரவை உறுப்பினர்களின் கருத்து என்னவாக இருக்கிறதென்பதைப் பொதுமக்கள் அறிந்து கொள்ள உதவியாக இருப்பதுடன், பத்திரிகை, ஊடக நண்பர்களுக்கும் இது பயனுள்ளதாக இருக்கக்கூடும்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் அதிகளவில் ஊடகவியலாளர்கள் சட்டப்பேரவை வளாகத்தில் கூடுவதை இந்த நேரடி ஒளிபரப்பு குறைக்கக்கூடும். தகவல் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் தமிழகத்துக்கு இணைய வழி நேரடி ஒளிபரப்பு செய்வது ஒரு சவாலான விடயமாக இருக்காது.

தங்கள் தேர்தல் வாக்குறுதியில் உறுதியளித்திருந்த நேரடி ஒளிபரப்பை இந்த பட்ஜெட் தொடரிலேயே உறுதி செய்ய ஆவன செய்யவேண்டுமென தமிழக அரசை கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# முதல்வர் எடியூரப்பாவின் பதவிக்கு ஆபத்து? கர்நாடக அரசியலில் சலசலப்புகள் தீவிரம்



கர்நாடக முதல்வர் எடியூரப்பாவை பதவி விலகுவதற்கு கட்சியின் தேசியத் தலைமை வலியுறுத்திவருவதாக தொடர்ந்து சர்ச்சை நிலவும் சூழலில், டெல்லியில் பாரதிய ஜனதாக் கட்சியின் தேசியத்தலைவரான ஜே.பி.நட்டா உள்ளிட்ட முக்கியத் தலைவர்களை எடியூரப்பா கடந்த சனிக்கிழமையன்று சந்தித்தார். உள்துறை அமைச்சர் அமித்ஷா மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் ஆகியோரையும் அவர் சந்தித்தார் என பா.ஜ.க. தரப்புச்செய்திகள் தெரிவித்துள்ளன.

எடியூரப்பாவின் மகன்கள் கர்நாடக அரசு முடிவுகளில் தலையிடுகின்றனர் என பாரதிய ஜனதா கட்சியின் தேசியத் தலைமைக்கு புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும், விரைவிலேயே பா.ஜ.கவின் தேசியத் தலைமை எடியூரப்பாவிற்குப் பதிலாக புதிய முதல்வரை நியமிக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். எடியூரப்பாவின் வயது மற்றும் உடல்நிலை ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு கர்நாடக மாநிலத்துக்கு புதிய முதல்வரை நியமிக்கவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

பாரதிய ஜனதா கட்சியின் கொள்கைப்படி மூத்த தலைவர்கள் அரசுப் பதவிகளை ராஜினாமாச் செய்து, வேறு பொறுப்புகளுக்கு செல்கிறார்கள் என்று எடியூரப்பாவின் அரசியல் போட்டியாளர்கள் சுட்டிக்காட்டிவருகிறார்கள்.

பாரதிய ஜனதா கட்சியின் தேசியத் தலைமையோ, எடியூரப்பாவின் விலகல் மற்றும் அவருக்குப் பதிலாக புதிய முதல்வரை நியமிப்பது ஆகிய விடயங்கள் திட்டமிட்டு கச்சிதமாக நடைபெற வேண்டும் என்றும், ஆகவே, இது குறித்து விரிவான திட்டங்களை இறுதி செய்ய வேண்டும் எனவும் கருதுகிறது என கட்சியின் முக்கியஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

எடியூரப்பா பதவி விலகத் தயாராக இருக்கிறார் எனவும், ஆனால், அதற்குப் பதிலாக அவரது மகன்களுக்கு கர்நாடக பாரதிய ஜனதா கட்சியிலும் கர்நாடக அரசிலும் முக்கிய பொறுப்புகளை அளிக்க வேண்டும் என வலியுறுத்தி வருவதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், இதனை எடியூரப்பா தரப்பு மறுத்திருக்கிறது.

சமீபத்தில் கர்நாடக முதல்வருக்கு நெருக்கமான ஆதரவாளர் எனக் கருதப்படும் ஷோபா கரண்ட்லஜே மத்திய அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அதேசமயத்தில் மத்திய அமைச்சராக இருந்த கர்நாடகாவைச் சேர்ந்த சதானந்த கவுடா ராஜினாமாச் செய்துள்ளார். இதனால், கர்நாடக அரசியலில் பல திருப்பங்கள் ஏற்படும் என பாரதிய ஜனதா கட்சித் தலைவர்கள் கருதுகிறார்கள்.



## மாநிலங்களவையில்

# மேகதாது அணை விவகாரம்; தி.மு.க. உறுப்பினர் நோட்டீஸ்

நமது நாட்டில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் ஒவ்வொரு ஆண்டிலும் ஜூலை மாதம் தொடங்குவது வாடிக்கையான ஒன்று.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் இரண்டாவது அலையை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இந்தியா போராடிக்கொண்டிருக்கும் நிலையில், இந்திய நாடாளுமன்றின் மழைக் காலக் கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகிறது. இந்தக் கூட்டத் தொடர் அடுத்த மாதம் 13 ஆம் திகதி நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொடரை சுமுகமாக நடத்த ஒத்துழைக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் மோடி நேற்று நடந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த நிலையில், மேகதாது அணை விவகாரம் தொடர்பாக விதி 267 இன் கீழ், அவையை ஒத்திவைத்து விவாதம் நடத்த வேண்டும் என மாநிலங்களவையில் தி.மு.க. உறுப்பினர் திருச்சி சிவா நோட்டீஸ் விடுத்துள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

# புதுச்சேரியில் ஒரே வாரத்தில் 21 குழந்தைகளுக்கு கொரோனா; துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கவலை

புதுச்சேரியில் ஒரே வாரத்தில் 21 குழந்தைகள் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருக்கும் செய்தி கவலை அளிப்பதாக அம்மாநில துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் தொடர் முயற்சியாக வாராந்திர கொவிட் மேலாண்மை சீராய்வுக் கூட்டம் ஆளுநர் மாளிகையில் துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலர் அஸ்வனி குமார் உள்ளிட்ட சுகாதாரத்துறை, வருவாய்த் துறை, காவல்துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். புதுச்சேரியில் கொரோனா நிலவரம், மூன்றாவது அலையை எதிர்கொள்ள அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள், கரும்பூஞ்சை



நோய், தடுப்பூசி குறித்து படக்காட்சி மூலம் சுகாதாரத்துறை அதிகாரிகள் விளக்கினார்.

கூட்டத்தில் பேசிய துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், ''புதுச்சேரியில் 21 குழந்தைகள் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருக்கும் செய்தி கவலை அளிக்கிறது. அதனால், ஒவ்வொரு நிமிடமும் நாம் கவனமாகவும் எச்சரிக்கையோடும் செயல்பட வேண்டும். குழந்தைகள் கொரோனாவால் பாதிக்கப்படுவது குறித்த முழுமையான தகவல் அடங்கிய ஆய்வறிக்கையை அளிக்க வேண்டும். சூழ்நிலையைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்.

கொரோனா கட்டுக்குள் இருந்தாலும் எந்த நேரத்திலும் மூன்றாவது அலை தாக்கலாம் என்ற எச்சரிக்கை உணர்வோடு அனைவரும் செயல்படவேண்டும். அனைத்துக் குழந்தை நல மருத்துவர்களும் பொது நலமருத்துவர்களும் குழந்தைகளுக்கு தொற்று ஏற்படுகிறதா என்பதைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிறப்பான சிகிச்சைகள் அவர்களை அபாய கட்டத்தில் இருந்து காப்பாற்றியிருக்கிறது'' என்று கூறியிருக்கிறார்.

# மும்பையில் கனமழை பல கட்டடங்கள் இடிவு

## 24 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

மும்பையில் கனமழை காரணமாக இரண்டு இடங்களில் கட்டடங்கள் இடிந்து விழுந்த விபத்தில் குறைந்தது 24 பேர் உயிரிழந்தனர் எனத் தகவல் வெளியாகியிருக்கிறது. மும்பையில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக நேற்றுக் காலை செம்பூர், விக்ரோலி பகுதிகளில் மக்கள் வசிக்கும் இடங்களில் கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன. இதில், செம்பூர் பகுதியில் கட்டடம் இடிந்து விழுந்ததில் 17 பேரும், விக்ரோலி பகுதியில் கட்டடம் இடிந்து விழுந்ததில் 7 பேரும் உயிரிழந்துள்ளனர். கட்டட விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பிரதமர் நிவாரண நிதியில் இருந்து தலா ரூபா.2 லட்சம் வழங்கப்படும் என்றும் காயமடைந்தவர்களுக்கு ரூபா.50 ஆயிரம் வழங்கப்படும் என்றும் இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

# அரச காணியை அபகரிக்க கல்முனை நகரில் முயற்சி



கல்முனை தமிழர் பிரதேசத்திலுள்ள அரசகாணியை மதில் கட்டி அபகரிக்க முற்பட்டசமயம், உரிய அதிகாரிகள் தடுத்துநிறுத்திய சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கல்முனை 01 சி கிராம சேவகர் பிரிவிலுள்ள காலா காலமாக மழை வெள்ள நீர் வடிந்து தேங்கி நிற்கும் வடிச்சல் குளத்தின் ஒரு பகுதியில் தனியார் ஒருவரால் சுற்று மதில் அமைக்கப்பட்டது.

இத்தனைக்கும் அரச காணி என பதாதையும் அங்கு உள்ளது. அதனையும் மீறி குறித்த கல்முனைக்குடி நபர் அக்காணியில் மதில் கட்ட முனைந்துள்ளார்.

உரியவேளையில் அரச காணி அதிகாரிகள், கிராம சேவையாளர், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் தலையிட்டதன் காரணமாக அது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

அரச காணி என காட்சிப்படுத்தப்பட்ட குறித்த காணியில் சுற்று மதில் அமைக்கப்படும் தகவல் அறிந்து குறித்த 1சி பிரிவு கிராம சேவை உத்தியோகத்தர் த.சந்திரகுமாருக்கு பொதுமக்கள் தகவல் கொடுத்தனர்.

அதனையடுத்து அவர் கல்முனை வடக்கு பிரதேச செயலக காணிப் பிரிவு அதிகாரிகள் சகிதம் அங்கு சென்றார். சம்பவத்தையறிந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் தமிழ் இளைஞர் சேனைதலைவர்ந.சங்கீத் மற்றும் சேனை உறுப்பினர்கள் என பலர் அங்கு விரைந்தனர். அங்கு ஒருவித பதற்றம் நிலவியது. இரு சாராருக் கும் வாக்குவாதம் இடம் பெற்றது. 'குறித்த காணி காலா காலாமாக நான்கு கிராமசேவகர் பிரிவுகளில் இருந்து வடிந்து வரும் மழை வெள்ள நீர் தேங்கி நிற்கும் குளம் இது. அரச காணி என பதாதையும் இங்கு உள்ளது.

ஆகவே இங்கு கட்டுமானப் பணிகளைச் செய்ய வேண்டாம். காணிக்கான சட்டரீதியான ஆவணம் இருந்தால் முதலில் அதனை அலுவலகத்திற்கு எடுத்து வாருங்கள் 'என காணிக்கு உரிமை கோரிய கல்முனைக்குடி நபர்களிடம், அரச அதிகாரிகளால் கூறப்பட்டமையைத் தொடர்ந்து சுற்று மதில் அமைக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது. அண்மையில், இதே 1சி பிரிவில் உள்ள மற்றுமொரு அரச காணியும் தனியாரால் மண் நிரப்பப்பட்டு சர்ச்சைக்குள்ளாகி அது நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்

# சர்வதேச மட்டத்தில் பெயர் பதித்த யுவேந்திரா



சர்வதேச மட்டத்தில் தன் பெயரை பதித்து நமது நாட்டிற்கும் பிறந்த மண்ணிற்கும் புகுந்த மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளார் பொறியியலாளர் ஆர்.யுவேந்திரா.

பல்துறைக்கலைஞரான யுவேந்திரா திருக்கோவில் 'கவியுவன்' எனும் புனைப்பெயரில் பல சாதனைகளை நமது நாட்டினுள் நிலைநாட்டிய போதிலும் அதனையும் தாண்டி இன்று சர்வதேசத்திலும் தனது பெயரை பதிவு செய்து நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார்.

பொது நலவாய நாடுகள் அமைப்பினால் வெளிவிடப்படும் adda என்கிற இணைய சஞ்சிகையிலே இவ்வருடம் தென் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கான 15 மொழிகளிலே தேர்ந்தெடுக்கப்பட்ட 32 படைப்புகள் ஆங்கில மொழி பெயர்ப்புடனும் மூல மொழியிலும் 4 இதழ்களில் வெளியாகி வருகின்றன.

இதில் மூன்றாவது இதழிலே சுமார் 28 வருடங்களுக்கு முன்னால் அவரால் எழுதப்பட்ட 'வாழ்தல் என்பது' என்னும் சிறுகதையும் வெளியாகியுள்ளது.

இவ்வருடத்தில் தமிழில் வெளியாகிய முதலாவது கதையாக அது அமைந்துள்ளது. இப்படைப்பினை வெளியிட்டமைக்காக இலங்கை நாணயப்படி சுமார் 42,000 ரூபா அவருக்கும் சுமார் 70,000 ரூபா இதனை மொழிபெயர்த்த கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களுக்கும் கிடைக்கப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

ஆயினும் அவருக்கு கிடைக்கப்பெற்ற பணத்தை கல்வி கற்கும் தேவையுடைய மாணவன் ஒருவரின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கியுள்ளார் என்பதே அவரின் பெருமனதை இங்கு வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

இந்நிலையில் கடந்த காலத்தில் இலங்கை நிருவாக சேவையினை அவர் தொட்டபோதிலும் கெட்ட காலத்தினால் கை நழுவவிட்டிருந்தார். ஆனாலும் தடைக்கல்லை எல்லாம் படிக்கற்களாக மாற்றி தன்வாழ்வில் உயர்ந்தாலும் தான் நடந்து வந்த கல்லும் முள்ளும் நிறைந்த பாதையினை மறக்காத யுவன் போன்றவர்கள் நமது மண்ணில் வாழ்வதையிட்டு நம் மண் பெருமை கொள்கின்றது. பொறியியல் துறையில் பட்டம் பெற்றாலும் தனக்கு விரும்பிய கற்பித்தல் துறையோடு விருப்புடன் செய்யப்படும் இவரின் கற்பித்தலினால் இன்றும் பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் பரவும் டெல்டா திரிவு தொடர்பில் காத்தான்குடி தடுப்புச் செயலணி அவதானம்

நாட்டில் தற்போது வேகமாகப் பரவிவரும் 'டெல்டா' திரிவு தொடர்பில் காத்தான்குடி நகருக்கான கொவிட்-19 தடுப்புச் செயலணி விசேட அவதானம் செலுத்தியுள்ளது.

இதன்படி, இச்செயலணியினால் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

வெளி மாகாணத்திலிருந்து காத்தான்குடிக்கு வருகை தருபவர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யத் தவறுபவர்கள் மீண்டும் செல்ல 'பாஸ்' அனுமதி வழங்கப்படமாட்டாது என காத்தான்குடி நகருக்கான கொவிட்-19 தடுப்புச் செயலணி அறிவித்துள்ளது.

பெருநாள் கால சன நெரிசலைக் குறைக்கும் வகையில் எதிர்வரும் வியாழக்கிழமை வரை காத்தான்குடி நகரில் உள்ள அத்தியாவசிய சேவைகள் உட்பட சகல வர்த்தக நிலையங்களும் இரவு 8 மணியுடன் மூடப்பட வேண்டும்.

அத்துடன், கடற்கரை, ஆற்றங்கரை போன்ற இடங்களில் பொதுமக்கள் ஒன்றுகூடுவது எதிர்வரும் 25ஆம் திகதி வரை தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரதான வீதிகளில் கூடும் பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினரால் தொடர்ச்சியாக பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கல்குடா தொகுதி சிகையலங்கார சங்கத்தினர் பிரதேச சபை தவிசாளருடன் விசேட சந்திப்பு

வரையறுக்கப்பட கல்குடா தொகுதி சிகையலங்கார சங்கத்தினர் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபருடன் விசேட சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டார்.

தவிசாளர் காரியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சங்கத்தின் தலைவர் ஏ.ஆர்.அஸ்பீர் தலைமையில் இச் சந்திப்பு இடம்பெற்றது.



சிகையலங்கார தொழிலில் தாம் எதிர்நோக்கும் சவால்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை சங்க உறுப்பினர்கள் முன்வைத்தனர்.

சிகையலங்கார சங்கத்தினர் முன்வைத்த கோரிக்கைகளை எதிர்வரும் காலங்களில் கவனத்தில் கொண்டு நிவர்த்தி செய்து தருகிறேன் என தவிசாளர் வாக்குறுதி வழங்கினார். அத்துடன், கொரோனா காலப்பகுதியில் பிரதேசசபை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றுக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கிய சங்க உறுப்பினர்களுக்கு தனது நன்றிகளை தவிசாளர் தெரிவித்தார். இச் சந்திப்பில் சங்கத்தின் செயலாளர் எம்.ஆர்.எம்.சனூஸ் மற்றும் சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# கரடியனாற்றில் சட்டவிரோதமான மணல் கொள்ளையர்கள் சிக்கினர்

## பதினொரு வாகனங்களுடன் சாரதிகளும் கைது

மட்டக்களப்பு- கரடியனாறு பொலிஸ் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மணல் கொள்ளையில் ஈடுபட்டிருந்த பதினொரு வாகனங்களும் அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என கரடியனாறு பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரி துஷார ஹேமச்சந்திர நேற்று தெரிவித்தார்.

மாவடி ஓடைப் பிரதேச வாவியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்ந்த ஐந்து டிப்பர் வாகனங்களையும் அவற்றின் சாரதிகளையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை வடிச்சல் ஆற்றில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த ஆறு டிராக்டர்களும் அவற்றின் சாரதிகளும் வவுணதீவு விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவர்கள் நாளைமட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜராகவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.





# இலங்கையுடனான ஒருநாள் தொடர் முதல் போட்டியில் இந்தியா வெற்றி

இலங்கை அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி 7 விக் கெட்டுக்களால் அபாரமான வெற்றியைப் பெற்றுள் ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலை பெற்றுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முத லில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது. சமிக்க கருணாரத்ன ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களையும் தசுன் சானக 39 ஓட்டங்களை யும் எடுத்தனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில் தீபக் சஹர், சஹல் மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 263 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 36.4 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றிபெற்றது.

ஷிகர் தவான் ஆட்டமிழக்காது 86 ஓட்டங்க ளையும் தனது அறிமுகப் போட்டியில் விளையாடிய இசான் கிசான் 59 ஓட்டங்களையும், பிரித்வி ா 43 ஓட்டங்களையும் எடுத்தனர். இலங்கை அணியின் பந்துவீச்சில் தனஞ்சய டி சில்வா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக 24 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங் களைச் சேர்த்த பிரித்விஷா தெரிவுசெய்யப்பட்டார். தொடரின் இரண்டாவது போட்டி நாளை நடை பெறவிருக்கிறது.

# ஒருநாள் கிரிக்கெட் தொடர் பங்களாதேஷ் அணி வெற்றி

## சிம்பாப்வேக்கு எதிரான

சிம்பாப்வே அணிக்கெதி ரான இரண்டாவது ஒருநாள் போட்டியில்பங்களாதேஷ்அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை ஒரு போட்டி மீதமுள்ள நிலை யிலேயே 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.



ஹராரேயில் நேற்று நடை பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றது. மதெவரே 56 ஓட்டங்களையும் பிரெண்டன் டெய்லர் 46 ஓட்டங்களையும் எடுத்தனர். பங்களாதேஷ் அணியின் சொரிபுல் இஸ்லாம் 4 விக்கெட்டுக்களையும் சகிப் ஹல் ஹசன் 2 விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 241 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 49.1 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி பெற்றது. சகிப் அல் ஹசன் 96 ஓட்டங்களையும் மொஹமட் சய்புடின் 28 ஓட்டங்களையும் ஆட்டமிழக் காது பெற்றுக்கொண்டனர். சிம்பாப்வே அணியின் லூக் ஜோங்வே 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார். இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக சகிப் அல் ஹசன் தெரிவு செய் யப்பட்டார். இரு அணிகளுக் கு மிடையிலான மூன்றாவதும் தொடரின் இறுதியுமான ஒரு நாள் போட்டி நாளை நடை பெறவுள்ளது.



# விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் சூதாட்டம்; சர்வதேச டென்னிஸ் அமைப்பு விசாரணை

விம்பிள்டன் டென்னிஸ் போட்டித் தொடரில் 'மட்ச் பிக்சிங்' எனப்படும் சூதாட்டம் நடைபெற்றதாக புகார்கள் எழுந்துள்ளன. கிராண்ட்ஸ்லாம் போட்டிக ளில் ஒன்றான விம்பிள்டன் லண்டனில் சமீபத்தில் நடைபெற்றது.

இதில் ஆடவர் ஒற்றையர் போட்டி மற்றும் இரட்டையர் ஆட்டம் ஒன்றின் முடிவுகள் சந்தேகத் திற்கு இடமளிக்கும் வகையில் இருக்கின்றன என புகார்கள் எழுந்தன.

இந்த இரண்டு ஆட்டங்களிலும் சூதாட்டம் நடைபெற்றதாக சந்தேகம் எழுந்துள்ளது. இரண்டு போட்டிகளின்போதும் இதுவரை இல்லாத அள வுக்கு பந்தயம் கட்டப்பட்டதாகவும் இதனால் சூதாட்டம் நடைபெற்றிருக்க வாய்ப்பு இருப்பதாக வும் சர்வதேச டென்னிஸ் ஒருமைப்பாட்டு அமைப் புக்கு புகார்கள் வந்திருக்கின்றன.

ஆடவர் இரட்டையர் போட்டியில் முதல் செட்டில் அபாரமாக வென்ற ஜோடி ஒன்று, அடுத்த 3 செட்களில் தோல்வியை தழுவியது. இதுபோன்று ஒற்றையர் போட்டி ஒன்றிலும் முடிவுகளில் சந் தேகம் எழுப்பப்பட்டிருக்கிறது.

இதுபற்றி கருத்துத் தெரிவித்துள்ள சர்வதேச டென்னிஸ் ஒருமைப்பாட்டு அமைப்பு நிர்வாகி ஒருவர், 'மட்ச் பிக்சிங்' நடந்ததற்கான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை என்றும் எனினும், இரகசிய விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் முதலே சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் 34 முறையற்ற ஆட்டங்கள் நடைபெற்றன என சர்வதேச டென்னிஸ் ஒருமைப் பாட்டு அமைப்புக்கு புகார்கள் வந்திருக்கின்றன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.



# ஒலிம்பிக்கில் பங்குபெறும் முதல் மூன்றாம் பாலினத்தவர் எதிர்ப்புக் குரல்களுக்கு மத்தியில் களம் காண்கிறார்

ஒலிம்பிக் போட்டியில் பங்குபெறப்போகும் முதல் திருநங்கை என்ற வரலாற்றுச் சிறப்பைப் பெற நியூசிலாந்து அணிக்காக பளுதூக்குதலில் களம் இறங்கும் 43 வயதான ஹபார் லாரல் ஹபார்ட் காத்திருக்கிறார்,

இளம் வயதிலேயே பளுதூக்குதலில் கவனம் செலுத்திய ஹபார்ட் 2012 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை ஆண்களுக்கான பளுதூக்குதல் போட்டிக ளில் பங்கேற்று வந்தார்.

அதன் பிறகு உடலில் மாற்றங்களை உணர்ந்த அவர் மூன்றாம் பாலினத்தவரான திருநங்கையாக மாறினார். எதிர்ப்பு, சலசலப்புக்கு மத்தியில் பெண்களுக்கான சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்றார்.

2017 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓபின் பளுதூக்குதலில் தங்கப்பதக்கம் வென்ற அவர், 2019 இல் பசுபிக் விளையாட்டிலும், 2020 இல் ரோமில் நடந்த ரோமா உலகக் கோப்பையிலும் மகுடம் சூடினார். திருநங்கைகள் பெண்களோடு மோதுவதை அனுமதித்த சர்வதேச ஒலிம்பிக் சபை, அவர்களுக்கு என்று பிரத்யேக விதிமுறைகளை வகுத்துள்ளது. அதன்படி போட்டியில் கலந்து கொள்வதற்கு ஓர் ஆண்டுக்கு முன்பாக அவர்களின் டெஸ்டோஸ்டிரோன் ஹார்மோன் அளவு குறித்த தரவுகள் தொடர்பான கட்டுப்பாடுகள் முக்கியமான விதியாகும். இதன் அடிப்படையில் கடந்த மாதம் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கான நியூசிலாந்து அணிக்கு அவர் தேர்வு செய்யப்பட்டார்.

ஆனாலும் அவர் விடயத்தில் வீராங்கனைகள் தரப்பில் தொடர்ந்து அதிருப்தி நிலவுகிறது. திரு நங்கைகளை பெண்களுக்கான போட்டியில் விளையாட வைப்பது நியாயமற்றது என்று பெல்ஜி யம் நாட்டின் பளுதூக்குதல் வீராங்கனை அன்ன வான் பெலிங்கன் பகிரங்கமாகவே எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அதாவது, இத்தகைய நபர்கள் பெண்களை விட கூடுதல் வலுவுடன் இருப்பார்கள் என்பது அவர்களது எண்ணமாகும்.

'நாங்கள் ஹபார்ட்டுடன் இணைந்து நெருக்க மாகப் பணியாற்றி வருகிறோம். ஏனெனில் அவர் மீது இப்போது பெரிய அளவில் கவனம் செலுத் தப்படுகிறது. அவருக்கு எல்லா வகையிலும் நாங் கள் ஆதரவாக இருப்போம்' என்று நியூசிலாந்து ஒலிம்பிக் குழு தெரிவித்துள்ளது.

ஹபார்ட், டோக்கியோ ஒலிம்பிக்கில் பெண்களுக் கான சூப்பர் ஹெவிவெயிட் 87 கிலோவுக்கு மேற் பட்ட பிரிவில் களம் காணுகிறார். எதிர்ப்புக் குரல் ஒலிப்பதை அறிந்த சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் தோமஸ் பச், அவர் விதிமுறைக்கு உட்பட் டுத்தான் தேர்வாகியுள்ளார். போட்டி நடக்கும் போது விதிமுறைகளில் மாற்றம் செய்ய முடியாது. சம் பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரிடமும் ஆலோசித்து, வருங்காலத்தில் இது தொடர்பாக புதிய விதிமுறை களை உருவாக்குவது குறித்து முடிவு செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





விபுலமாமணி
வி.ரி. சகாதேவராஜா

“படித்தவர்கள், விபுலானந்தரின் அறிவை மதித்தவர்கள், அவருக்குப் பதவி அளித்தவர்கள் எல்லோருமே பாரதியைக் குழிதோண்டிப் புதைத்தார்கள். இத்தனை பேருக்கும் எதிராகப் பாரதியை மகாகவியாக படித்த மக்களிடையே உலவ விட்டவர் விபுலானந்த அடிகள் என்றால் அவரது அஞ்சா நெஞ்சத்தை என்னென்பது?”

# முத்தமிழ் வித்தகர் ஆற்றிய காலத்தால் அழியாத பணிகள்

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 74 ஆவது சிரார்த்த தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இந்தச் சிறப்புக்கட்டுரை பிரசுரமாகிறது.

முத்தமிழிலும் சிறந்து விளங்கிய காரணத்தால் முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்பட்டவர் சுவாமி விபுலானந்தர். அவரின் 74 ஆவது சிரார்த்த தினம் இன்றாகும்.

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் ஆற்றிய அளப்பரிய பணிகளை இன்றும் வையகம் நினைவில் கொண்டிருக்கிறது.


அவர் பல்துறை சார்ந்த பேறறிஞர். ஆசிரியராக, பண்டிதராக, விஞ்ஞானப் பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழகங்களில் தமிழ்த் துறைப் பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழிபெயர்ப்பாளராக முத்தமிழ் வித்தகராக விளங்கியவர் விபுலானந்தர். சமூகத் துறவியாக வாழ்ந்து செய்த தொண்டுகளும் தமிழுக்காற்றிய சேவைகளும் அவரை என்றும் நினைவு கூரச் செய்வன.

தமிழ் இலக்கியம் பாரதிக்கு முன்னால் பாரதிக்குப் பின்னால் என்று இன்றைக்கு வரையறை செய்யப்படுகின்றது. அந்த அளவுக்குத் தமிழ் இலக்கியத்திலே தாக்கத்தை ஏற்படுத்தியவர் மகாகவி பாரதியார். சுப்பிரமணிய பாரதியார் எழுதிய பாட்டுக்கள் யாவும் மிகுந்த உணர்ச்சியுடன் முன்னேற்றமான கருத்துக்கள் பொதிந்துள்ளனவாய் இருந்தாலும் அவை பழைய யாப்பமைதியோடும், தமிழ் மரபோடும் பொருந்தாமையினால் உண்மையான தமிழ்க் கவிகளல்ல என இலக்கண, இலக்கியங்களைக் கற்றறிந்த பண்டிதர்கள் வெறுத்தனர்.அப்பாடல்களுக்குரிய மேலான சிறப்பையும் கொடுக்க மறுத்தனர்.

ஆனால், அடிகளார் அண்ணாமலை நகரை அடைந்த போது அங்கு ‘பாரதி கழகம்’ என்ற சங்கமும் கூட்டி அப் பாட்டுக்களை இசை அறிந்த புலவரைக் கொண்டு இசையுடன் பாடுவித்தார்.

அதன் பின்னரே பாரதியாரின் புகழும், பாராட்டுக்களும் தமிழ் நாடெங்கணும் பரவின. தேடாதிருந்த பாரதியாரை தமிழுலகம் கனம் பண்ண வைத்த பெருமை விபுலானந்த அடிகளாருக்கே உரியதாகும்.

பாரதியாரைப் பற்றி ஆயிரக்கணக்கான நூல்கள் வந்து விட்டன. லட்சக்கணக்கான கட்டுரைகள் எழுதப்பட்டு விட்டன. பாரதியைத் தெரியாத தமிழர்கள் பட்டிகளில், தொட்டிகளில் கூட இல்லை என்கின்ற அளவுக்கு அவரது பாடல்கள் படித்தவர்களையும் பாமரர்களையும் எட்டியிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் சுவாமி விபுலானந்த அடிகளே.



பாரதியாரின் முற்போக்குக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாத அஒபிராமணப் பண்டிதர்கள் பாரதியை அவமதித்தார்கள். அவரின் பாடல்களை வெறுத்தார்கள். அவற்றை இலக்கியமென்று ஏற்க மறுத்தார்கள். மக்களுக்குத் தெரியவராதபடி மறைத்தார்கள். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் புறக்கணித்தார்கள்.

படித்தவர்கள், விபுலானந்தரின் அறிவை மதித்தவர்கள், அவருக்குப் பதவி அளித்தவர்கள் எல்லோருமே பாரதியைக் குழிதோண்டிப் புதைத்தார்கள். இத்தனை பேருக்கும் எதிராகப் பாரதியை மகாகவியாக படித்த மக்களிடையே உலவ விட்டவர் விபுலானந்த அடிகள் என்றால் அவரது அஞ்சா நெஞ்சத்தை என்னென்பது?

விபுலானந்தர் தோன்றாதிருந்திருந்தால், தமிழ்நாட்டில் கால் ஊன்றாதிருந்திருந்தால், மகாகவி பாரதியாரை உலகம் காணாதிருந்திருக்கும். பாரதியின் தமிழ் வீணாக மடிந்திருக்கும். சங்க காலத்திற்கு முன்னர் தோன்றிய எண்ணற்ற இலக்கியங்களை ஆற்றுநீரிலே எறிந்து அழித்ததைப் போல, தீயிலே போட்டு எரித்ததைப் போல, சாதி வெறி பிடித்த மேதாவிகள் பாரதியின் பாடல்களையும் அழித்திருப்பார்கள்.

சுவாமி விபுலானந்தர் அவர்கள் பல்கலைக்கழக மட்டத்திற்குப் பாரதியைக் கொண்டு சென்றமையால் பாரதியை யாராலும் அழிக்க முடியவில்லை. விபுலானந்த அடிகளின் தமிழ்ப் பணிகளிலே இமயமென உயர்ந்து நிற்பவற்றிலே அவர் பாரதியாரின் பாடல்களுக்கு அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தமையும் ஒன்றாகும்.

சங்க இலக்கியங்களுக்கு நிகராக எண்ணப்படுகின்ற ‘கங்கையில் விடுத்த ஓலை’ என்னும் அடிகளாரின் கவிதை மலரும் மற்றைய இனிமையான கவிதைகளும் எண்ணற்ற கட்டுரைகளும் இயற்றமிழுக்கு அவர் ஆற்றிய பணியினை இயம்பிக் கொண்டிருக்கின்றன.

அடிகள் மறைந்தாலும் அவர் முத்தமிழுக்கு ஆற்றிய பணிகள் என்றும் மறையாது.

# சமுர்த்தி வங்கிக்கு இருமாடிக் கட்டடம்



தெஹியோவிட்ட அட்டலுகம்புரவில் சமுர்த்தி வங்கிக்கான இரண்டு மாடிக் கட்டடத் தொகுதி கடந்த 16 ஆம் திகதி சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவால் திறக்கப்பட்டது.

ஒரு கோடியே 30 லட்சம் ரூபா செலவில் இந்த சமுர்த்தி வங்கிக்கான இரண்டு மாடி கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

அட்டலுகம்புர பிரதேசத்தில் சமுர்த்தி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை நான்காயிரம். 18 ஆயிரம் பேர் இவ் வங்கியில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், செஹான் சேமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுத்த் மஞ்சுள, ராஜிகா விக்ரமசிங்க, கேகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய உட்பட அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# டெல்டா வைரஸ் காற்றால் பரவும்

## அவதானம் என்கிறார் சன்ன ஜயசுமன

கொவிட் 19 வைரஸின் டெல்டா வகை எதிர்காலத்தில் காற்றின் ஊடாக பரவக்கூடிய சாத்தியம் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# முல்லையில் வாள்வெட்டு ஒருவர் படுகாயமடைவு

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பாண்டியன் குளம், கரும்புள்ளியான் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்து இனந்தெரியாத நபர்கள் நடத்திய வாள் வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேலும் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹயஸ் வாகனம் மற்றும் வீட்டுப் பொருள்களும் சந்தேகநபர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில், 3 பிள்ளைகளின் தந்தையான செல்வராசா யாதவராசா (43 வயது) என்பவரே படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மல்லாவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே கடுமையான தனிமைப்படுத்தல் சட்டங்கள்

## அமைச்சர் ரோஹித விளக்கம்



நாட்டு மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே அரசாங்கம் கடுமையான முறையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை செயற்படுத்துகிறது என துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தப்பட்டுள்ள சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு நாட்டு மக்கள் அனைவரும் கட்டுப்பட வேண்டும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரசியல் இலாபம் தேடிக் கொள்வதை எதிர்த்தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

சிவில் அமைப்பினரும், தொழிற்சங்கத்தினரும் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கும் போராட்டம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# மீன்பிடிக்கச் சென்ற மூன்று பேர் மாயம்

புத்தளம் கற்பிட்டி பகுதியிலிருந்து இயந்திரப்படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற 3 மீனவர்கள் இதுவரை கரைதிரும்பவில்லை என குடும்பத்தினர் தெரிவித்தனர்.

கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கற்பிட்டியிலிருந்து படகில் சென்ற நிலையில் 10 நாள்களாக எவ்விதத் தொடர்புகளும் இன்றி தாங்கள் உள்ளனர் என அவர்களின் குடும்பத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

கற்பிட்டி வன்னிமுந்தல் பகுதியைச் சேர்ந்த எம்.எஸ்.முஹம்மட் அலிகான் (வயது 26), முஹம்மட் நபீல் (வயது 45) மற்றும் கற்பிட்டி மணல்தோட்டம் பகுதியைச் சேர்ந்த நிசங்க (வயது 21) திருமணமான மூன்று மீனவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர் என அந்த மீனவர்களின் குடும்பத்தினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு மீன்பிடித் தொழிலுக்காக கடலுக்குச் சென்ற மீனவர்கள் மூவரும் இதுவரை கரைதிரும்பவில்லை என கற்பிட்டி பொலிஸ் நிலையத்திலும், கற்பிட்டி கடற்படை முகாமிலும் மூன்று மீனவர்களின் குடும்பத்தினர்களும் முறைப்பாடு செய்துள்ளனர் எனக் கூறினர்.

அத்துடன் கற்பிட்டி மீனவர்கள், பொதுமக்கள் ஆகியோரின் உதவியில் காணாமல் போன மூன்று மீனவர்களையும் தேடி வருகின்றனர் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த மீனவர்கள் பயணித்தனர் எனக் கூறப்படும் 7088 இலக்கமுடைய இயந்திரப்படகு ஒன்று மன்னார் மாவட்டத்தின் பியர் பிரதேசத்திலுள்ள தீடதீவுப் பகுதியில் ஒதுங்கியுள்ளதாக மன்னார் பொலிஸ் ஊடாக கடந்த சனிக்கிழமை இரவு தகவல் கிடைத்துள்ளது என மீனவர்களின் உறவினர்கள் குறிப்பிட்டனர்.

எனினும் படகு மாத்திரமே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது எனவும் மீனவர்கள் தொடர்பில் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் உறவினர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

இவ்வாறு மூன்று மீனவர்கள் காணாமல் போயுள்ளமை கற்பிட்டி பிரதேசத்தில் மீனவர்களிடையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருப்பதுடன், கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# விசேட சுற்றிவளைப்பு 3,009 பேர் கைதாகினர்

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது 3 ஆயிரத்து 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 645 பேரும் உள்ளடங்குகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த சுற்றிவளைப்பின் போது மதுபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் 580 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 4 மோட்டார் ஷெல்கள் கிளிநொச்சியில் மீட்பு

## செயலிழக்கச் செய்ய நடவடிக்கை

கிளிநொச்சி - அக்கராயன் காட்டுப்பகுதியில், 4 மோட்டர் ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



இராணுவத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த மோட்டர் ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் மீட்கப்பட்ட ஷெல்களை, நீதிமன்றத்தின் அனுமதியுடன் செயலிழக்க செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அக்கராயன் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# போர்ட்சிற்றிக்குள் அத்துமீறி நுழைய முயன்ற சீன நாட்டவர் உட்பட ஐவர் கைதாகியுள்ளனர்

கொழும்பு, ஜுலை, 19

கொழும்பு துறைமுக நகருக்குள் அத்துமீறி நுழைய முற்பட்ட சீன நாட்டவர் ஒருவர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் அதிவேக நெடுஞ்சாலைப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தில் கடமையாற்றி வந்த சீன நாட்டவர் ஒருவர் பொத்துவில் பகுதியைச் சேர்ந்த நால்வரை கொழும்பு துறைமுக நகருக்குள் அழைத்துச் செல்ல முற்பட்டு உள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துறைமுக நகருக்குள் நுழைவதற்கான நடைமுறைகளை மீறியமை தொடர்பில் குறித்த அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த ஐந்து சந்தேக நபர்களும் கொழும்பு, புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தேர்தல் சட்டத் திருத்தம் முன்மொழிவுகள் தொடர்பாக 21 அரசியல் கட்சிகளிடமிருந்து 155 முன்மொழிவுகள்



தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம்காண்பதற்கும், தேவையானதிருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கும் நியமிக்கப்பட்ட சபை முதல்வரும், வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்தனவின் தலைமையிலான விசேட நாடாளுமன்ற குழுவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட 21 அரசியல் கட்சிகளிடம் இருந்து முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதற்கு மேலதிகமாக, பொது மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களால் 155 முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன என அக்குழுவின் செயலாளரும், நாடாளுமன்ற பணியாட்தொகுதி பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் தலைமையிலான விசேட நாடாளுமன்றக் குழுவுக்கு, முன்மொழிவுகள் மற்றும் யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த காலம் ஜுலை 15 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இதற்கமைய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி, மௌபிம ஜனதா கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (உடுநுவர கிளை), ஜனநாயக இடதுசாரி முன்னணி, லிபரல் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஜனநாயக ஐக்கிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ் மகாசபை, ஐக்கிய சமாதான முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் சமூக ஜனநாயகக் கட்சி, ஜனநாயகக் கூட்டணி, சிங்களதீப ஜாதிக பெரமுன, இலங்கை சமசமாஜக் கட்சி, சமத்துவக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமது முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளன.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள், குறித்த விசேட நாடாளுமன்றக் குழுவின் எதிர்காலக் கூட்டங்களில் ஆராயப்படவுள்ளன.

அதேநேரம், கடந்த 14 ஆம் திகதி விசேட குழுவின் முன்னிலையில் ஆஜராகியிருந்த இந்நாட்டின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு தமது யோசனைகளை அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையிலான குழுவிடம் சமர்ப்பித்திருந்தது.

விசேட குழுவின் அடுத்த அமர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.07.2021இல் வெளியிடப்பெற்றது.